தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்167/மா/2026

நாள்: 29.09.2026

C.நாகப்பன்,
ஆவடி, சென்னை–600 062. --- முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 062, ஆவடி, பூம்பொழில் நகர், அண்ணா தெரு, கதவு எண் 751 என்கிற முகவரியில் வசிக்கும் பூம்பொழில் நகர் குடியிருப்போர் நல சங்க தலைவர் திரு. C.நாகப்பன் என்பவரின் 27.06.2026 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.06.2026 அன்று பெறப்பட்டு 167/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

ஆணை

சென்னை–600 062, ஆவடி, பூம்பொழில் நகர், அண்ணா தெரு, கதவு எண் 751 என்கிற முகவரியில் வசிக்கும் பூம்பொழில் நகர் குடியிருப்போர் நல சங்க தலைவர் திரு. C. நாகப்பன் என்பவர் தனது 27.06.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, வார்டு 11, பூம்பொழில் நகரில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி இப்புகார் மனுவினை பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

2. திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, வார்டு 11–பூம்பொழில் நகரில் வசிக்கும் பொதுமக்கள் ஆவடி மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய காலி மனை வரி, பாதாள சாக்கடை கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் வீட்டு வரியினை முறையாக செலுத்தி குடியிருந்து வருகின்றோம். பூம்பொழில் நகரில் வசிக்கும் பொதுமக்கள் MINISTRY OF DEFENCE, H.V.F., AIR FORCE, ARMY, NAVY, ORDINANCE CLOTHING FACTORY, CRPF மத்திய பாதுகாப்புபடை, மத்திய அரசு நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று மிகக் குறைந்த ஓய்வூதியத்தில் குடும்பம் நடத்தி வருகின்றோம்.

3. சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இப்பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்படாமல் நிலுவையாக உள்ளது. கழிவு நீர் ஒவ்வொரு வீட்டிலேயும் ஆண்டு கணக்கில் செப்டிக் டேங்கில் தேங்குவதால் நிலத்தடி நீர் முற்றிலுமாக மாசடைந்து விட்டது. மழைக்காலங்களில் செப்டிக் டேங்க் நிரம்பி சாலைகளில் வழிந்தோடுகின்றது. கழிவுநீரை அகற்ற ஒரு லாரிக்கு ரூ. 4,000/– செலுத்தி வருகின்றோம். எங்களுக்கு வரும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தில் மாதா மாதம் கழிவுநீரை அகற்ற ஒரு லாரிக்கு ரூ.4,000/–

செலுத்தி வருவதால் அன்றாடம் குடும்பம் நடத்துவதற்கே வழியில்லாமல் தவித்து வருகின்றோம்.

4. ஆவடி மாநகராட்சி, வார்டு 11–பூம்பொழில் நகரில் வசிக்கும் 80 சதவீதம் பொது மக்கள் மற்றும் புதியதாக வீடு கட்ட ஆவடி மாநகராட்சியிடம் கட்டிட அனுமதிக்காக விண்ணப்பிக்கும் அனைவரும் பாதாள சாக்கடை இணைப்பிற்கு ரூ.10,000/–, குடிநீர் இணைப்பிற்காக ரூ. 10,000/– செலுத்தியுள்ளனர். ஆனால் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்படவில்லை.

5. மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களே இப்பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, ஆவடி மாநகராட்சிக்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்றும், மேலும் புதியதாக வீடுகட்ட அனுமதி வேண்டி விண்ணப்பிக்கும் பொதுமக்கள் அனைவரிடத்திலேயும் பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.10,000/– குடிநீர் கட்டணமாக ரூ. 10,000/–ம் இன்றைய தேதிவரையில் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் இத்திட்டத்தை செய்து முடிக்க டெண்டர் விடப்பட்டதாகவும், டெண்டர் எடுத்த நபர் பூமிக்கு அடியில் வெறும் பைப்புகளை மட்டும் புதைத்துவிட்டு பாதாள சாக்கடை திட்டத்தை செய்து முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டு சென்று விட்டதாக தெரியவருகிறது. பூம்பொழில் நகர் சம்பங்கி தெருவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. ஆனால் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்படாமல் நிலுவையாக வைக்கப்பட்டுள்ளது.

6. மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களே இம் மனுவினை கருணையுடன் பரிசீலித்து கீழ்க்கண்ட ஆணைகளை ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு பிறப்பிக்குமாறு பூம்பொழில் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆவடி மாநகராட்சி, வார்டு 11–பூம்பொழில் நகரில் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் யாரெல்லாம் பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.10,000/– குடிநீர் கட்டணமாக ரூ.10,000/–ம் செலுத்தி உள்ளார்களோ அவர்களுக்கும் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.10,000/– குடிநீர் கட்டணமாக ரூ.10,000/– செலுத்தாதவர்கள் அனைவருக்கும் சேர்த்து ஒரே நிலையாக பாதாள சாக்கடை இணைப்பை உடனடியாக கொடுக்குமாறும். பாதாள சாக்கடை இணைப்புக்கான கட்டணம் இதுநாள்வரை செலுத்தாதவர்கள் மாதா மாதம் தவணை முறையில் செலுத்த அனுமதிக்குமாறும், இதனால் சாலைகளை அவ்வப்போது தோண்ட வேண்டிய அவசியம் இருக்காது சாலை பராமரிப்பு செலவும் குறையும். சுற்றுப்புறமும் தூய்மையாக இருக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 08.07.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. இந்நிலையில், மனுதாரர் தன்னுடைய 27.07.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களே 27.06.2026 நாளிட்ட என்னுடைய புகார் மனுவில் ஆவடி மாநகராட்சி, வார்டு 11–பூம்பொழில் நகரில் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இப்பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்படாமல் நிலுவையாக உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும்

பாதிக்கப்பட்டுள்ளனர். கழிவுநீர் இணைப்பை உடனடியாக வழங்க வேண்டி ஆணை பிறப்பிக்க வேண்டி மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு மனு செய்து இருந்தேன்.

2. இதற்கிடையில், வாழ்நாள் முழுவதும் இரவு பகல் என்று பாராமல் பொதுமக்களுக்காக உழைத்த பூம்பொழில் நகர் குடியிருப்போர் நலச் சங்க செயலாளர் திரு.பால்சாமி அவர்கள் காலமாகிவிட்டார். இவருடைய மறைவால் இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் சொல்லொணா துக்கத்தில் உள்ளோம்.

3. வயது மூப்பின் காரணமாக எனக்கும் உடல் நிலை சரியில்லை. மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை கருணை கூர்ந்து என்னுடைய மனுவின் மீது தங்களின் மேலான ஆணையினை பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்."

4. மனுதாரரின் புகார் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 01.09.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.08.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில் ஆவடி மாநகராட்சி ஆணையாளர் தனது27.08.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 2662/2026/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனுவில், ஆவடி மாநகராட்சி, வார்டு எண் 11, பூம்பொழில் நகர் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் புதை வடிகால் திட்டத்திற்கு வைப்புத் தொகை தலா ரூ.10,000/– செலுத்தியவர்கள் மற்றும் செலுத்தாதவர்கள் அனைவருக்கும் வீட்டிணைப்பு வழங்கவும், இதற்குரிய வைப்புத் தொகையை தவணை முறையில் செலுத்த அனுமதிக்குமாறு கோரப்பட்டுள்ளது. ஆகவே, இதனால், சாலையை அவ்வப்போது தோண்ட வேண்டிய அவசியம் எழாது என கோரிக்கை வைத்துள்ளார்.

ஆவடி மாநகராட்சியில் JNNURM திட்டத்தின் கீழ் புதை வடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சில பகுதிகளில் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டிணைப்பு வழங்க வேண்டிய பகுதி மற்றும் விடுபட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 TNCRUDP திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டப்பணி ரூ.98.59 கோடி மதிப்பீட்டிலும், குடிநீர் திட்டப்பணி ரூ.59.92 கோடி மதிப்பீட்டிலும், டிசம்பர் 2024 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணி டிசம்பர் 2026க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆவடி பூம்பொழில் நகர் பகுதியில் புதை வடிகால் திட்ட பிரதான குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.பிரதான குழாய்கள் இணைக்கும் பணியும் தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது.மேலும், இக்குழாய்களில் இருந்த அடைப்புகள் மற்றும் உடைப்புகள் சரி செய்யப்பட்டுள்ளது. பூம்பொழில் நகர் உள்ளிட்ட மண்டலம்–1ற்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டிணைப்பு வழங்க திரு.B.ரவி என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. விரைவில் பூம்பொழில் நகர் பகுதிக்கு புதை வடிகால் வீட்டிணைப்பு வழங்கப்பட உள்ளது.

ஆவடி பூம்பொழில் நகர் பகுதியில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழாயில் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம் செய்யும் பணி தற்பொழுது கோயில் பதாகை பிரதான சாலையில் நடைபெற்று வருகிறது. பூம்பொழில் நகர் உள்ளிட்ட மண்டலம்–1ற்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டிணைப்பு வழங்க M/s. VEDASS GLOBAL (NEW) INFRASTRUCTURE AND PROJECTS PVT. LTD., என்ற நிறுவனத்திற்கு பணி

உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. விரைவில் பூம்பொழில் நகர் பகுதிக்கு குடிநீர் வீட்டிணைப்பு வழங்கப்பட உள்ளது.

மேலும், அரசாணை (நிலை) எண்.126, நாள் 28.11.2018 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்படி தவணை முறையில் புதை வடிகால் மற்றும் குடிநீர் வைப்புத்தொகை வசூலிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் கோரியவாறு 10 தவணைகளில் வைப்புத்தொகை செலுத்த தெரிவிக்கப்படுகிறது."

6. மனுதாரர் திரு. C. நாகப்பன் மற்றும் அவருக்கு உதவியாக Er. A. ராஜாபாதர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 01.09.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"1. திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, வார்டு 11–பூம்பொழில் நகரில் MINISTRY OF DEFENCE, H.V.F., AIR FORCE, ARMY, NAVY, ORDINANCE CLOTHING FACTORY, CRPF மத்திய பாதுகாப்புபடை, மத்திய அரசு நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று கடந்த 20 வருடங்களாக வசித்து வருகிறோம். நாங்கள் ஆவடி மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய காலி மனை வரி, பாதாள சாக்கடை கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் வீட்டு வரியினை முறையாக செலுத்தி குடியிருந்து வருகின்றோம்.

2. சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இப்பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்படாமல் நிலுவையாக உள்ளது. கழிவு நீர் ஒவ்வொரு வீட்டிலேயும் ஆண்டு கணக்கில் செப்டிக் டேங்கில் தேங்குவதால் நிலத்தடி நீர் முற்றிலுமாக மாசடைந்து விட்டது. மழைக்காலங்களில் செப்டிக் டேங்க் நிரம்பி சாலைகளில் வழிந்தோடுகின்றது. கழிவுநீரை அகற்ற ஒரு லாரிக்கு ரூ. 4,000/– செலுத்தி வருகின்றோம்.எங்களுக்கு வரும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தில் மாதா மாதம் கழிவுநீரை அகற்ற ஒரு லாரிக்கு ரூ.4,000/– செலுத்தி வருவதால் அன்றாடம் குடும்பம் நடத்துவதற்கே வழியில்லாமல் தவித்து வருகின்றோம்.

3. ஆவடி மாநகராட்சி, வார்டு 11–பூம்பொழில் நகரில் வசிக்கும் 80 சதவீதம் பொது மக்கள் மற்றும் புதியதாக வீடு கட்ட ஆவடி மாநகராட்சியிடம் கட்டிட அனுமதிக்காக விண்ணப்பிக்கும் அனைவரும் பாதாள சாக்கடை இணைப்பிற்கு ரூ.10,000/–குடிநீர் இணைப்பிற்காக ரூ.10,000/– செலுத்தியுள்ளனர். ஆனால் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்படவில்லை.

இம்முறை மன்ற நடுவத்தில் மனு அளித்தப்பின் தற்போது ஆவடி மாநகராட்சியில் எங்கள் பகுதியில் பாதாள சாக்கடை குடிநீர்(மு) இணைப்பிற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பாதாள சாக்கடை பணியினை வரும் மழை காலத்திற்குள் நிறைவு செய்யும் வகையிலும் தரமான முறையிலும் நடைபெற ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.".

7. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவடி மாநகராட்சி இளநிலை பொறியாளர் 01.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரரின் புகார் தொடர்பாக ஆவடி மாநகராட்சியில் JNNURM திட்டத்தின் கீழ் புதை வடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சில பகுதிகளில் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டிணைப்பு வழங்க வேண்டிய பகுதி மற்றும் விடுபட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 TNCRUDP திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டப்பணி ரூ.98.59 கோடி மதிப்பீட்டிலும், குடிநீர் திட்டப்பணி ரூ.59.92 கோடி மதிப்பீட்டிலும், டிசம்பர் 2024 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணி டிசம்பர் 2026க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆவடி பூம்பொழில் நகர் பகுதியில் புதை வடிகால் திட்ட பிரதான குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.பிரதான குழாய்கள் இணைக்கும் பணியும் தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது.மேலும், இக்குழாய்களில் இருந்த அடைப்புகள் மற்றும் உடைப்புகள் சரி செய்யப்பட்டுள்ளது. மேலும் பூம்பொழில் நகர் உள்ளிட்ட மண்டலம்–1ற்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டிணைப்பு வழங்க திரு.B.ரவி என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மனுதாரர் குடியிருக்கும் தெருவில் உள்ள பணிகள் இரண்டு வாரத்திற்குள் முடிவடையும் வகையிலும், பூம்பொழில் நகரில் உள்ள மற்ற பகுதிகளில் இரண்டு மாதத்திற்குள் பணிகளை நிறைவு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கூடுதலாக பூம்பொழில் நகர் உள்ளிட்ட மண்டலம் 1ற்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டிணைப்பு வழங்க M/s. VEDASS GLOBAL (NEW) INFRASTRUCTURE AND PROJECTS PVT. LTD., என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பூம்பொழில் நகர் பகுதிக்கு குடிநீர் வீட்டிணைப்பு பணி நடைபெற்று வருகிறது என்ற விவரத்தினையும் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அரசாணை (நிலை) எண்.126, நாள் 28.11.2018 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்படி தவணை முறையில் புதை வடிகால் மற்றும் குடிநீர் வைப்புத்தொகை வசூலிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் கோரியவாறு 10 தவணைகளில் வைப்புத்தொகை செலுத்த உத்தரவு வழங்கப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனுக்கள், மனுதாரர் திரு. C. நாகப்பன் மற்றும் அவருக்கு உதவியாக விசாரணைக்கு ஆஜரான Er.A.ராஜாபாதர் ஆகியோரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மனுவில் MINISTRY OF DEFENCE, H.V.F., AIR FORCE, ARMY, NAVY, ORDINANCE CLOTHING FACTORY, CRPF மத்திய பாதுகாப்புபடை, மத்திய அரசு நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, வார்டு 11–பூம்பொழில் நகரில் கடந்த 20 வருடங்களாக வசித்து வருகிறார்கள் என்பதும், ஆவடி மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய காலி மனை வரி, பாதாள சாக்கடை கட்டணம் குடிநீர் கட்டணம் மற்றும் வீட்டு வரியினை முறையாக செலுத்தி குடியிருந்து வருகிறார்கள் என்பதும், சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் மேற்கண்ட பூம்பொழில் நகரில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்படாமல் நிலுவையாக உள்ளது என்பதும், கழிவு நீர் ஒவ்வொரு வீட்டிலேயும் ஆண்டு கணக்கில் செப்டிக் டேங்கில் தேங்குவதால் நிலத்தடி நீர் முற்றிலுமாக மாசடைந்து உள்ளது என்பதும், மழைக் காலங்களில் செப்டிக் டேங்க் நிரம்பி சாலைகளில் வழிந்தோடுகின்றது என்பதும், தங்களுக்கு வரும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தில் மாதா மாதம் கழிவுநீரை அகற்ற ஒரு லாரிக்கு ரூ. 4,000/– செலுத்துவதால், அன்றாடம் குடும்பம் நடத்துவதற்கே வழியில்லாமல் தவித்து வருகிறார்கள் என்பதும், மேற்கண்ட நகரில் வசிக்கும் 80 சதவீதம் பொது மக்கள் மற்றும் புதியதாக வீடு கட்ட ஆவடி மாநகராட்சியிடம் கட்டிட அனுமதிக்காக விண்ணப்பிக்கும் அனைவரும் பாதாள சாக்கடை இணைப்பிற்கு ரூ.10,000/– மற்றும் குடிநீர் இணைப்பிற்காக ரூ.10,000/– செலுத்தியும் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்படவில்லை என்பதும், இம்முறை மன்ற நடுவத்தில் மனு அளித்தப்பின் தற்போது ஆவடி மாநகராட்சியில் மனுதாரர் பகுதியில் பாதாள சாக்கடை

இணைப்பு மற்றும் குடிநீர் வீட்டிணைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்பதும், பாதாள சாக்கடை பணியினை வரும் மழை காலத்திற்குள் நிறைவு செய்யும் வகையிலும் தரமான முறையிலும் நடைபெற ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் மற்றும் அவருக்கு உதவியாக விசாரணைக்கு ஆஜரான Er.A.ராஜாபாதர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் தொடர்பாக ஆவடி மாநகராட்சியில் JNNURM திட்டத்தின் கீழ் புதை வடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு, மேற்படி திட்டத்தில் சில பகுதிகளில் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டிணைப்பு வழங்க வேண்டிய பகுதி மற்றும் விடுபட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 TNCRUDP திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டப்பணி ரூ.98.59 கோடி மதிப்பீட்டிலும், குடிநீர் திட்டப்பணி ரூ.59.92 கோடி மதிப்பீட்டிலும், டிசம்பர் 2024 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்பதும், இப்பணி டிசம்பர் 2026க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதும், பூம்பொழில் நகர் பகுதியில் புதை வடிகால் திட்ட பிரதான குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, பிரதான குழாய்கள் இணைக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது என்பதும், இக்குழாய்களில் இருந்த அடைப்புகள் மற்றும் உடைப்புகளும் சரி செய்யப்பட்டுள்ளது என்பதும்,பூம்பொழில் நகர் உள்ளிட்ட மண்டலம்–1ற்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டிணைப்பு வழங்க ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது என்பதும் மனுதாரர் குடியிருக்கும் தெருவில் உள்ள பணிகள் இரண்டு வாரத்திற்குள் முடிவடையும் வகையிலும், பூம்பொழில் நகரில் உள்ள மற்ற பகுதிகளில் இரண்டு மாதத்திற்குள் பணிகளை நிறைவு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மேலும் கூடுதலாக பூம்பொழில் நகர் உள்ளிட்ட மண்டலம்–1ற்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டிணைப்பு வழங்க M/s. VEDASS GLOBAL (NEW) INFRASTRUCTURE AND PROJECTS PVT. LTD., என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பூம்பொழில் நகர் பகுதிக்கு குடிநீர் வீட்டிணைப்பு பணியும் நடைபெற்று வருகிறது என்பதும், அரசாணை (நிலை) எண்.126, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.11.2018–ன்படி தவணை முறையில் புதை வடிகால் மற்றும் குடிநீர் வைப்புத்தொகை வசூலிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் கோரியவாறு 10 தவணைகளில் வைப்புத்தொகை செலுத்த உத்தரவு வழங்கப்படும் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கைமற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக, ஆவடி மாநகராட்சியில்JNNURM திட்டத்தின் கீழ் புதை வடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டும், மேற்படி திட்டத்தில் சில பகுதிகளில் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டிணைப்பு வழங்க வேண்டிய பகுதி மற்றும் விடுபட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 TNCRUDP திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டப்பணி ரூ.98.59 கோடி மதிப்பீட்டிலும், குடிநீர் திட்டப்பணி ரூ.59.92 கோடி மதிப்பீட்டிலும், பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வரும் இப்பணி டிசம்பர் 2026க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும், பூம்பொழில் நகர் பகுதியில் புதை வடிகால் திட்ட பிரதான குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, பிரதான குழாய்கள் இணைக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது என்றும், இக்குழாய்களில் இருந்த அடைப்புகள் மற்றும் உடைப்புகளும் சரி செய்யப்பட்டுள்ளது என்றும்,பூம்பொழில் நகர் உள்ளிட்ட மண்டலம்–1ற்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டிணைப்பு வழங்க ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது என்பதும் மனுதாரர் குடியிருக்கும் தெருவில் உள்ள பணிகள் இரண்டு வாரத்திற்குள் முடிவடையும் வகையிலும், பூம்பொழில் நகரில் உள்ள மற்ற

பகுதிகளில் இரண்டு மாதத்திற்குள் பணிகளை நிறைவு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அரசாணை (நிலை) எண்.126, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.11.2018–ன்படி, மனுதாரர் கோரியவாறு 10 தவணைகளில் வைப்புத்தொகை செலுத்த உத்தரவு வழங்கப்படும் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், இம்முறை மன்ற நடுவத்தில் மனு அளித்தப்பின் தற்போது ஆவடி மாநகராட்சியில் பூம்பொழில் நகர் பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் குடிநீர் வீட்டிணைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்றும், பாதாள சாக்கடை பணியினை வரும் மழை காலத்திற்குள் நிறைவு செய்யும் வகையிலும் தரமான முறையிலும் நடைபெற ஆவடி மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு உதவியாக விசாரணையில் கலந்து கொண்ட Er. A. ராஜாபாதர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட பூம்பொழில் நகர் வார்டு 11–ல் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாதாள சாக்கடை இணைப்பு பணிகளை இரண்டு மாதத்திற்குள் நிறைவு செய்திட ஆவடி மாநகராட்சி தரப்பில் விசாரணைக்கு ஆஜரான இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறும் மற்றும் புதை வடிகால் மற்றும் குடிநீர் வைப்புத் தொகை தவணைகளில் வசூலிப்பது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 126, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.11.2018–ன்படி உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. C. நாகப்பன்,
பூம்பொழில் நகர் குடியிருப்போர் நல சங்க தலைவர்,
கதவு எண் 751, அண்ணா தெரு, பூம்பொழில் நகர்,
ஆவடி, சென்னை–600 062.

(2) ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி, ஆவடி, சென்னை–600 054.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

நகல் :

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

30/9/26

செயலாளர்.

30/9/26